# கவிதை மழையில் நனைந்த கலைஞர்

# Kavithai Mazhaiyil Nanaintha Kalainjar

***முனைவர் அ. அப்சர்***
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
புதுக்கல்லூரி, சென்னை

**Dr. A. Apsar**
*Assistant Professor, Department of Tamil*
*New College, Chennai*

**ஆய்வுச் சுருக்கம்**

*“தோன்றின் புகழோடு தோன்றுக” என்பது வள்ளுவர் பெருந்தகையின் வாய்மொழி. அப்படி இவ்வுலகில் புகழோடு பிறந்த மேன்மக்கள் தங்களுடைய மொழி, இனம், நாடு, பண்பாடு போன்றவற்றைத் தங்கள் கண்போல் காத்து வரலாற்றின் நீங்காத பக்கங்களில் இடம் பிடித்தனர். வாழும் பெரியோர்களில் தன்னுடைய சொல், செயல், மூச்சு என அனைத்தையும் தமிழுக்காக அர்ப்பணித்த அற்புத மனிதர் கலைஞர் ஆவார். தாய்நாடும் தாய்மொழியும் தம்மிரு கண்கள் என்பது கலைஞரின் கொள்கை. வாழும் வரலாறாய், வரலாற்றின் மொத்த உருவமாய் இருக்கும் அவருடைய கவிதை மழையில் நனைந்த தமிழை நாம் பார்ப்போம்.*

***முக்கியச் சொற்கள்:***

*தொல்காப்பியம், சங்க அகப்பாடல்கள், நற்றாய் கூற்று, செவிலி கூற்று, இல்வாழ்க்கை, இன்பம்*

**Abstract**

*‘Appear with glory’ is the motto of Valluvar Purundagai. In this way, noble people who were born with fame in this world kept their language, race, country and culture like their eyes and took a place in the indelible pages of history. Among the living elders, he is a wonderful artist who dedicated his words, actions and breath to Tamil. Motherland and mother tongue are the eyes of the artist. Let us see his poetry wet in the rain which is a living history.*

***Keywords:***

*Artist, Valluvar, scholar, Anna, Poetry, Motherland, Mother Tongue*

**Citation**

Apsar, A. “Kavithai Mazhaiyil Nanaintha Kalainjar.” *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 1, 2022, pp. 1–4.
DOI: *https://doi.org/10.5281/zenodo.20136085*

**வர்தான் கலைஞர்**

*முத்தமிழின் மூதறிஞர் முதுபெரும் அரசியலாளர், அறிஞர் அண்ணாவின் அன்புத்தம்பி சிந்தனைச் சிகரம் படைப்பிலக்கியச் சாதனைகள் பல படைத்தவர். உணர்வுகளின் உந்துதலால் பள்ளிப் பருவத்திலேயே படைப்புகளை உருவாக்கியவர், பட்டம் பெறாதவர் படைத்த படைப்புப் பட்டறை, மக்கள் நெஞ்சில் 'கலைஞர் என்ற மந்திரச் சொல்லால் நீங்காத இடம் பிடித்த மக்கள் தலைவர் ஆவார். கலைஞர் கவியரங்கத் தலைமைக் கவிஞராய் இருந்து நிகழ்த்திய கவியரங்குகளில் பொழிந்த கவிதைகள் ஏராளம். அவர் தமிழால் நனைந்த கவிஞர்கள் ஏராளம். தாமிருக்கும் இடம் எதுவாயினும் தமிழுக்குத் தனியிடம் தருபவர்.*

**கவிதை மழையில் நனைந்த தமிழ்**

*கலைஞர் கவிதைகளில் தமிழும், தமிழ்நாடும் முக்கிய இடம் பெறுகின்றன. வீரத்தமிழ் கொஞ்சும் நாடு, பைந்தமிழ் நாடு, வண்டமிழ் நாடு என்றெல்லாம் பாராட்டும்போது தமிழின் வளமும், மனமும் வெளிப்படுகின்றது.*

*தமிழுக்காகத் தலை கொடுத்த குமணவள்ளலைப் பற்றிப் பாடும்போது*

***"தேன் விற்பார் தனைச் சுற்றும் ஈக்கள் போல்***
***வான் தமிழால் கவிதை பின்னும் புலவர் கூட்டம்***
***வட்டமிடும் குமண மன்னன்"*** *(ப - 122)*

*எனத் தமிழ்ப் புலவர் ஈக்கள் போல குமணவள்ளலை மொய்ப்பர் என்று சொல்லி*

***"இளங்குமணன் அண்ணன் காலடியில்***
***வணங்கி வீழ்ந்தான் வள்ளல் தழுவிக் கொண்டான்***
***தமிழ்ச் சாத்தனாருக்குத் தலையைக் கொடையாந்தரச் சம்மதித்தேன்***
***தம்பிக்கும் ஒரு மன்னிப்பைக் கொடையாய்த் தந்தான்***
***தம்பி குடையைத் தந்தான்***
***தனக்கினி வேண்டாவென்று அதனை அண்ணன் தமிழுக்கீந்தான்".***

*என்று தமிழுக்காகத் தலையை ஈந்த குமணவள்ளலைத் தனித் தமிழால் பாராட்டுகிறார்.*

*விடுதலை வீரர்கள் பற்றிய கவியரங்கில் நிறைவாகத் தமிழின் அருளைப் பின்வருமாறு வேண்டுகிறார்,*

***"தங்கக் குன்றே தமிழே தாயே! உன்***
***சிங்கப் புதல்வரின் சிறப்பினைச் சொன்னோம்***
***எங்கும் தமிழகம் வெற்றி விளைத்திட***
***இங்கு நீ எமக்கே அருள்வாய் அம்மா"*** *(ப - 131)*

*வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் நடந்த கவியரங்கில் தமிழ்க்குறள் வாசிக்கிறார்.*

***பகைவர்க்குத் தாழாமல் படைக் கண்டு வீழாமல்***
***பல்லூழி வாழ்கின்ற தமிழ்*** *(ப - 134)*

*பரமத்தி வேலூர் கந்தசாமி கண்டர் கல்லூரியில் "நீர்க்குடும்பம்" பற்றிய கவியரங்கில் கலைஞரின் தலைமைக் கவிதையில்.*

***"தேனே கனியே தினையே அமுதே***
***ஊனே உயிரே தமிழே தாயே***
***வணக்கம் சொன்னேன் வாழ்க நன்று" (ப - 213)***

*என்று வாழ்த்துகிறார்.*

*பேரறிஞர் அண்ணா மறைந்த போது வானொலியில் கலைஞர் அண்ணாவுக்காகப் படைத்த அஞ்சலிக் கவிதை தமிழர் உள்ளங்களில் என்றும் நீங்கா இடம் பெற்று இருக்கக்கூடியது. தமிழன்னை வள்ளுவரிடம் சென்று, தமிழகம் வாழ, தமிழர்கள் வாழ காஞ்சியில் அண்ணாவாகப் பிறப்பெடுக்க வேண்டினாள் என்று கலைஞர் கூறும்போது இருள் கவிந்து சோக வாட்டம் கொடி போட்ட நிலையில்*

***"வாடினாள் தமிழன்னை சோகப்பட்டுப்***
***பாடினாள் தமிழன்னை சுடுநெருப்பில்***
***ஆடினாள் தமிழன்னை***
***ஓடினாள் ஓடினாள்"***

*என்று குறளாசானை நோக்கி ஓடியதாகக் கலைஞர் கண்ணீர் சிந்துகிறார்.*

*அண்ணாவை கலைஞர் தாயாகவும், தமிழாகவும், தமிழகத்தின் மூத்த சேயாகவும் கண்டவர் என்பதை இதன்*

***"தாயாகத் - தமிழாகத் - தாயகத்தின் - மூத்த***
***சேயாகத் - தடைபடா அன்புருவாக***
***அண்ணன் கண்டவன் நான்"***

*என்பதன் மூலம் அறியலாம்.*

**கலைஞர் போற்றிய கன்னல்தமிழ்**

*முப்பெரும் விழாவில் தமிழை முதன்மைப்படுத்தி கலைஞர் இப்படித் தொடங்குகிறார்,*

***"எங்களுக்கு உயிராக வாய்த்த தமிழே***
***திங்களுக்கும் மாசுண்டு***
***தீந்தமிழே நீ களங்கமில்லாக் கதிர் ஒளிதான்***
***பொங்கலுக்குச் சுவை கூட்ட வெல்லம் வேண்டும்,***
***பொதிகைமலைத் தமிழே உனை வளர்க்க நல்ல உண்மை வேண்டும்***
***சங்கொலிக்கும் போர்க் காலத்தில்***
***வீரமாய்த் தழைக்கும் தமிழே!***
***வெற்றியாய் விலையும் தமிழே! (ப - 410)***

*உணர்வு மேலோங்க ஊற்றெடுக்கும் தமிழ்ச் சிறப்பைக் கலைஞரின் கவிதை மழை கண்முன் வானவில்லாய் நிறுத்துகிறது.*

*கலைஞரை அரவணைத்துக் காப்பது அன்னைத் தமிழே என்று தன்னுடைய ஒவ்வொரு கவிதையிலும் சொல்கிறார், பாவேந்தரின் "செந்தமிழே உயிரே நறுந்தேனே" எனும் பாணியில்,*

***"தமிழே! தேனே! தங்கக் கனியே!***
***அமிழ்தே! அன்பே! அழகுக் கலையே!***
***எழிலே! அறிவே! எண்ணச் சுடரே!***
***பொழிலே! புகழே! பொன்னின் மணியே!***
***திருவே! உருவே! திங்கட் குளிரே!***
***தருவே! நிழலே! நிழல் தரு சுகமே!***
***தாயே! உன்றன் தாளினைப் பற்றி***
***தலைமைக் கவிதை பாடிட வந்தேன்!    (ப - 659)***

*என்று உருவகம் ஊற்றெடுக்க தமிழ்த் தாயின் திருவடிகளை வணங்கி கவிதை மழை பொழிகிறார்.*

*கலைஞர் நான்காவது முறை முதல்வரானதும் வான்புகழ் வள்ளுவருக்குத் தேன் தமிழ்க் குமரியில் நூற்று முப்பத்து மூன்று அடி உயரத்தில் இமயம் தொடும் சிலை அமைத்தார், அவ்விழாவில் நடந்த கவியரங்கில் தலைமைக் கவிதையாக,*

***"அடலேறு மொழித் தமிழே - இன்பக்***
***கடலேறு தனித் தமிழே - சோலை***
***மடலேறு சுவைத் தமிழே - நீ என்***
***உடலேறி உயிரேறி வாழ்விக்கின்றாய்***
***வணங்குகின்றேன்"    (ப - 689)***

*என்று தமிழ் வணக்கம் தருகிறார். அதுபோல பும்புகாரில் நடந்த "சிலப்பதிகார விருந்து" என்ற கவியரங்கில் தமிழுடன் சிலம்பைத் தொடர்பு படுத்தி,*

***"இடையழகு மணிமேகலையில் காட்டிச்சிலம்பில்***
***நடையழகு காட்டுகின்ற தமிழணங்கே! இதோ கவிஞர்***
***படைவரிசை கிளம்பிற்றம்மா உனக்குப்***
***பாவரிசை வைப்பதற்கு"    (ப - 394)***

*என்று தமிழ்ச்சாரல் வீசுகிறார்.*

**முடிவுரை**

*கலைஞரின் கவிதை மழையின் ஒவ்வொரு துளியிலும் தமிழ் தெரிக்கிறது. தமிழே கலைஞராகவும், கலைஞரே தமிழாகவும் வலம்வரும் நிலையை இக்கவிதைமழை கவினுறக் காட்டுகிறது. கலைஞரின் கொள்கை தமிழ்ச் சமுதாயத்திற்காகவே பாடுபடுவது தான் என்பதை முப்பத்தைந்தாண்டுகளுக்கு முன்னரே சட்டமன்றத்தில் "என்னுடைய கடைசி நிமிட மூச்சிருக்கும் வரையில் தமிழ்ச் சமுதாயத்திற்காக ஏழை எளிய மக்களுக்காகப் பாடுபடுவேன்" என்று உறுதியளிக்கிறார். இவ்வுறுதியில் என்றும் அவர் அடிபிறழாமல் வாழ்ந்து வருகிறார். என்பதற்கு அவருடைய தமிழ்க் கவிதைகளே சிறந்த சான்று என்று கொள்ளலாம்.*